**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

(2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீகுரோதி வருடம், மார்கழித்திங்கள் 19 ம் நாள்)

**இ.ம.எண். 08/2024**

**in**

**அ.வ.எண்.331/2015**

P.சிவக்குமார் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கார்த்திகேயகுருக்கள் ... 1ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி
2. S.K.ராஜசேகரன்
3. S.K.மகேஸ்வரன்
4. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர்
5. தாசில்தார் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   காங்கயம் ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ புரபோஸ்ட் 2 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 12.12.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கனகராஜ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும்

முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–

i) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் பேரில் தாவா சொத்துக்களில் உணவகம் மற்றும் தேநீர் கடை வைத்து தொழில் செய்து அனுபவித்து வருவதை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இடைஞ்சல் செய்ததால் மேற்படியார் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்து தாவா சொத்துக்கள் மனுதாரர் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதல்ல என்று ஆட்சேபித்துள்ளார். மேலும் எதிர்வழக்குரையில் விளம்புகை பரிகாரம் கோராததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று கூறியுள்ளார். தாவா சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரத்தைப் பொறுத்து வழக்கில் சேர்க்க வேண்டியிருப்பதால் வழக்கை திருத்தம் செய்ய

வேண்டும் என்று இ.ம.எண்.3/2023 மனு தாக்கல் செய்து மேற்படி மனு 20.06.2024 ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

iii) தாவா சொத்துக்களில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும் அனுபவமும் இல்லை என்ற விபரம் தெரிந்து கொண்டே எதிர்வழக்குரையில் கூறியுள்ள 02.06.2015 மற்றும் 26.06.2015 தேதிகளில் மோசடியாக பாகப்பிரிவினை பத்திரங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வட்டாட்சியர் அவர்கள் ஜாரி செய்து கொடுத்து சொத்துடன் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களையும் சேர்த்து மோசடியாக 2, 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகள் வித்யா ஆகிய நான்கு பேர்களும் 26.06.2015ம் தேதியில் பதிவு பாகப்பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள்.

iv) மேற்படி பாகப்பத்திரத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கள் 2, 3 எதிர்மனுதாரர்களின் மற்ற பாக சொத்துடன் சேர்க்கப்பட்டுள்ள விபரம் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. ஆகவே வழக்கில் 2, 3 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்துக்களை மனுதாரரின் தகப்பனார் அனுபவித்து வந்து அவர் இறந்த பின்பு மனுதாரரும் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்.

v) தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதால் பின்னிட்டு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு 4, 5

எதிர்மனுதாரர்களை 4, 5 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம் :–**

i) மனுதாரர் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒத்துக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்கள் மனுதாரருடையது அல்ல என்றும் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதாக கூறியுள்ளதாகவும் அதனால் மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதாகவும் தாவா சொத்துக்களில் 1ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றும் அதனால் 2, 3 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கூறுவது எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல.

iii) மேற்படி 02.06.2015 மற்றும் 26.06.2015 தேதியில் மோசடியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக கூறுவது உண்மையல்ல. மேற்படி விபரம்

மனுதாரருக்கு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளபோதே தெரிந்திருந்தும் 2015ம் வருடத்திலிருந்து 10 வருடங்களாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்து ஏதோ புதிய சங்கதிகள் தற்போதுதான் தெரிய வந்ததாக 2, 3 எதிர்மனுதாரர்களையும் அரசு அலுவலர்களான 4, 5 எதிர்மனுதாரர்களையும் கட்சி சேர்க்ககோருவது எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல.

iv) மேலும் தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை மனுதாரர் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருவதாக கூறுவது உண்மையல்ல. மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காக 10 வருடங்களுக்கு பின்னிட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோருவது எந்தவகையிலும் ஏற்கத்தக்கதல்ல. மேலும் 4, 5 எதிர்மனுதாரர்கள் எதன் அடிப்படையில் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என மனுதாரர் மனுவில் எவ்வித காரணத்தையும் முன்வைக்காததால் இம்மனு முதல்நோக்கு நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே மனுதாரரின் மனுவை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரை சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

6. மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வட்டாட்சியர் அவர்கள் ஜாரி செய்து கொடுத்து சொத்துடன் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களையும் சேர்த்து மோசடியாக 2, 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகள் வித்யா ஆகிய நான்கு பேர்களும் 26.06.2015 ம் தேதியில் பதிவு பாகப்பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள் என்றும் மேற்படி பாகப்பத்திரத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கள் 2, 3 எதிர்மனுதாரர்களின் மற்ற பாக சொத்துடன் சேர்க்கப்பட்டுள்ள விபரம் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது என்றும் ஆகவே வழக்கில் 2, 3 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதால் பின்னிட்டு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு 4, 5 எதிர்மனுதாரர்களை 4, 5 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி 02.06.2015 மற்றும் 26.06.2015 தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்ட விபரம் மனுதாரருக்கு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளபோதே தெரிந்திருந்தும் 2015ம்

வருடத்திலிருந்து 10 வருடங்களாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்து 2, 3 எதிர்மனுதாரர்களையும் அரசு அலுவலர்களான 4, 5 எதிர்மனுதாரர்களையும் கட்சி சேர்க்ககோருவது எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காக 10 வருடங்களுக்கு பின்னிட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோருவது எந்தவகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும் மேலும் 4, 5 எதிர்மனுதாரர்கள் எதன் அடிப்படையில் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என மனுதாரர் மனுவில் எவ்வித காரணத்தையும் முன்வைக்காததால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் முதலில் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 02.03.2016 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. கடந்த 27.01.2022 அன்று தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யக்கோரி இ.ம.எண்.137/2023 என்ற மனுவும், பின்னிட்டு கடந்த 19.07.2023 அன்று தாவா சொத்துக்களை வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ யாரும் இடையூறு செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண்.325/2023 என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 01.02.2023 அன்று விளம்புகை பரிகாரத்தைப் பொறுத்து அசல் வழக்கை திருத்தம் செய்யக்கோரி இ.ம.எண்.2/2023 என்ற மனுவானது தாக்கல்

செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 20.06.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக அசல் வழக்கானது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் கடந்த 20.08.2024 அன்று 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதிக்கு வட்டாட்சியர் அவர்கள் ஜாரி செய்து கொடுத்து சொத்துடன் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களையும் சேர்த்து மோசடியாக 2, 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகள் வித்யா ஆகிய நான்கு பேர்களும் 26.06.2015ம் தேதியில் பதிவு பாகப்பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள் என்றும் மேற்படி பாகப்பத்திரத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கள் 2, 3 எதிர்மனுதாரர்களின் மற்ற பாக சொத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதால் 2, 3 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2, 3 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும் தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதால் பின்னிட்டு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு 4, 5 எதிர்மனுதாரர்களை 4, 5 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காக 10 வருடங்களுக்கு பின்னிட்டு 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோருவது

எந்தவகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்று சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்துக்கள் 2, 3 எதிர்மனுதாரர்களின் மற்ற பாக சொத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதால் 2, 3 எதிர்மனுதாரர்களையும் அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

11. எனவே அசல் வழக்கில் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நிலையில் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்களான 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் தாவா சொத்துக்கள் ஆதியில் 4, 5 எதிர்மனுதாரர்களான அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் 4, 5 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

12. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையிலும் அசல் வழக்கில் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள்

இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் உபயதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இவ்வழக்கில் மேற்கொண்டு ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஜனவரி மாதம் 03 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.03 19:22:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.03 19:22:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.